**திருகோணமலையில் 11 ஆந் திகதி ஜூன் மாதம் 2008 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபையின் முதலாவது பேரவையின் ஆரம்ப அமர்வின் போது கௌரவ கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் விஜேவிக்ரம அவர்கள் ஆற்றிய உரை.**

கௌரவ அவைத் தலைவர் அவர்களே,
கௌரவ முதலமைச்சர் அவர்களே,
கௌரவ அமைச்சர்களே,
கௌரவ மாகாண சபை உறுப்பினர்களே,
மதிப்பிற்குரிய விருந்தினர்களே,
சகோதர சகோதரிகளே,

இன்று கிழக்கு மாகாண சபையின் இந்த முதலாவது அமர்வு வைபவத்தின் போது இங்கு பிரசன்னமாகி இருப்பதனையிட்டும் இம்முக்கிய உரையினை நிகழ்த்துவதனையிட்டும் நான் பெருமகிழ்ச்சியடைவதுடன் கௌரவமிக்கதொன்றாகவும் கருதுகின்றேன்.

முதற்கண் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் அவரது அரசாங்கம் சார்பாக கிழக்கு மாகாணசபைக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கிழக்கு மாகாணசபை தனது முதலாவது அமர்வினை ஆரம்பிக்கும் இன்றைய தினம் கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற மக்களுக்கான வரலாற்று முக்கியத்துவமிக்க தினமொன்றாக அமைகின்றதுடன் இலங்கை அரசியலில் ஒரு முக்கிய மைல் கல்லாகவும் அடையாளப்படுத்துகின்றது.

பயங்கரவாத செயற்பாடுகளின் விளைவாக நிலவிய முரண்பாடுமிக்க சூழ்நிலையின் காரணமாக 1991 ஆம் ஆண்டு தொடக்கம் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் மாகாணசபைத் தேர்தல்களை நடாத்த முடியாமலிருந்ததனால் கடந்த 17 வருடங்களுக்கு மேல் கிழக்கு மாகாண மக்கள் மாகாணசபையொன்றினைப் பெற முடியாதிருந்தது.

அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்கள் 2005 நவம்பர் மாதம் சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதிலிருந்து வடக்கு கிழக்கில் வாழ்கின்ற மக்களுக்கு சமாதானமான தீர்வொன்றினை கொண்டு வருவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பல தடவைகள் சமாதான முயற்சிகளை மேற்கொண்டார். சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு மூன்று மாத காலத்தினுள் பாதுகாப்பு படையினரைக் கொண்டு செல்லும் வாகனங்கள், கடற்படைக் கப்பல்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் இராணுவ தளபதியை கொலை செய்வதற்கான முயற்சி போன்ற ஆத்திரமூட்டக்கூடிய தொடர்ச்சியான தாக்குதல்களின் பின்னரும் சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுத்த அரசாங்கம் தொடர்ந்து முயற்சித்தது.

தமிழீழ விடுதலைப்புலி பயங்கரவாதிகள் மாவிலாறு அணைக்கட்டை மூடிய போதும் மூதூரில் வாழ்ந்த முஸ்லிம்கள் தங்கள் வாழிடங்களிலிருந்து பலவந்தமாக

வெளியேற்றப்பட்ட போதும் சேருவில பிரதேசத்திலுள்ள அப்பாவி விவசாயிகளுக்கு மறுக்கப்பட்ட நீரினை மீள வழங்குவதற்கான நடவடிக்கையைப் பாதுகாப்புப் படையினர் ஆரம்பித்தனர். இந்தக் கட்டத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்காக தமிழீழ விடுதலைப்புலி பயங்கரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் கந்தளாய்க்கும் கிண்ணியாவுக்கும் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீளக் குடியமர்த்தவும் அதிமேதகு சனாதிபதி அவர்கள் பாதுகாப்புப் படையினரைப் பணித்தார்.

அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஆற்றல் மிக்க தலைமைத்துவத்தின் கீழ் வீரமும் தைரியமும் மிக்க எமது படையினர் மற்றும் பொலிசாரின் சிறப்பான ஒருங்கிணைக்கப்பட்ட தொடர்ச்சியான படை நடவடிக்கைகள் கிழக்கு மாகாணத்தினையும் அதன் மக்களையும் பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து மீட்டெடுத்தன என்பதை குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். அரசாங்கத்தின் தொலைநோக்கான அதிமேதகு சனாதிபதி அவர்களின் மஹிந்த சிந்தனையில் குறித்துரைக்கப்பட்ட “கிழக்கின் உதயம்” தசாப்தங்களாக முரண்பாடுகளினால் புறக்கணிக்கப்பட்டு நலிவடைந்துள்ள கிழக்கு மாகாணத்தினை அபிவிருத்தி செய்வதற்கென பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு மாகாண மக்களுக்கு உண்மை நிலையைத் தோற்றுவித்திருந்தது.

ஆகையினால், கிழக்கில் வாழும் மக்களுக்கு சுதந்திரத்தினைப் பெற்றுக்கொடுத்து அச்சமின்றி வாழ்வதற்கும் அவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளைக் மேற்கொள்வதற்கும் கிழக்கு மாகாணத்தை விடுவிப்பதற்காக தங்கள் உயிரையும் அங்க அவயங்களையும் அர்பணித்த வீரம், தைரியமிக்க எமது படையினருக்கும் பொலிசாருக்கும் மரியாதை செலுத்துவது எனது கடமையாகின்றது.

இயல்பு வாழ்க்கையினை மீளக் கொண்டு வருவதற்கும் 17 வருட இடைவெளியின் பின்னர் மாகாண சபைக்கு தங்களது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டதற்கும் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் வழங்கப்பட்ட தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டுதல்களிற்கும் கிழக்கு வாழ் மக்கள் தங்கள் பாராட்டுக்களை வெளிகாட்டியுள்ளனர்.

**புவியியல் அமைப்பு**

கிழக்கு மாகாணம் இலங்கையின் கிழக்கு கரையோரத்தில் அமைந்துள்ளதுடன் அதன் கிழக்கெல்லையாக வங்காளவிரிகுடாவும் வடக்கெல்லையாக வட மாகாணமும் மேற்கெல்லையாக வட மத்திய மற்றும் மத்திய மாகாணங்களும் தெற்கெல்லையாக ஊவா மற்றும் தெற்கு மாகாணங்களும் அமைந்துள்ளன. கிழக்கு மாகாணத்தின் மொத்தப்பரப்பானது 390 சதுர கிலோமீற்றர் உள்நாட்டு நீர் நிலைகளும் உள்ளடங்க 9,792 சதுர கிலோமீற்றர்களாகும். இலங்கையின் மொத்தப்பரப்பில் 16% இனை கிழக்கு மாகாணம் கொண்டுள்ளது. பிரபலமிக்க மணற் கடற்கரைகளுடன் கூடிய நீண்ட கரையோரம், அதிகளவிலான உள்நாட்டு நீர்நிலைகள், இயற்கை வனக்கலப்பு, விவசாய நிலங்கள் மற்றும் புகழ்பெற்ற திருகோணமலை இயற்கைத் துறைமுகம் என்பன இலங்கையிலுள்ள ஏனைய மாகாணங்களிலும் கிழக்கு மாகாணத்தை மிகவும் அழகுப்படுத்துகின்றன. கிழக்கு மாகாணத்தின் தலைநகராக திருகோணமலை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

## சனத்தொகை

அண்ணளவாக இலங்கையில் மொத்த சனத்தொகையில் 8.21% இனை பிரதிபலிக்கும் வகையில் கிழக்கு மாகாணத்தின் சனத்தொகை 2006 ஆம் ஆண்டில் 1.6 மில்லியன் என மதிப்பிடப்பட்டது. மாகாணத்தின் சனத்தொகையானது மூன்று முக்கிய இனக்குழுக்களையும் உள்ளடக்குவதுடன் சிங்கள தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஏறக்குறைய சம அளவில் வாழ்ந்து வருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் நிலவிய பாதுகாப்பு சூழ்நிலை காரணமாக பெருந்தொகையான மக்கள் இம்மாகாணத்தில் இருந்து வெளியேறி வேறு பிரதேசங்களிலும் நாட்டுக்கு வெளியிலும் வாழ்ந்து வருகின்றனர். இடம்பெயர்ந்த மக்களில் சிலர் தமது வாழிடங்களுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

## பொருளாதாரம்

1980 களின் ஆரம்பப் பகுதியில் கிழக்கு மாகாணம் தேசிய உள்நாட்டு உற்பத்திக்கு 14% பங்களிப்பினை வழங்கியதுடன் பின்னர் மாகாணத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக அது 8% மாக வீழ்ச்சியுற்றது. இருந்தபோதிலும், மாகாணத்தில் ஏற்பட்ட பாதுகாப்பு சூழ்நிலையின் முன்னேற்றம் மற்றும் பொருளாதார மீள் செயற்படுத்துகை என்பவற்றினால் கடந்த வருடத்தில் மீண்டும் 16% இனை எய்தியுள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது மாகாணத்தின் தலா வருமானம் மாதமொன்றுக்கு ரூபா 2,905/= ஆக இருக்கும் அதே வேளை தேசிய தலாவருமானம் மாதமொன்றுக்கு ரூபா 3,968/= ஆக இருப்பதுடன் இது கிழக்கு மாகாணத்தினை விட 36.5% அதிகமானதொன்றாகும். விவசாயம் கிழக்கு மாகாணப் பொருளாதாரத்தில் பிரதான பங்கு வகிப்பதுடன் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறக்குறைய 10.2% இனை வகிக்கின்றது. இம்மாகாணத்தில் பாதுகாப்பு சூழ்நிலையில் ஏற்பட்ட முன்னேற்றத்துடன் குறிகாட்டிகளை உயர்த்துவதற்கான தேசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

## நிருவாகம்

மாகாணத்திலுள்ள மக்களுக்கு சேவை வழங்குவதற்காக கிழக்கு மாகாண சபையானது ஐந்து அமைச்சுக்களையும் பதினெட்டு திணைக்களங்களையும் தன்னகத்தே ஒழுங்கமைத்துள்ளது. இதற்கு மேலதிகமாக பிரதம செயலாளரின் கீழ் 16 நிறுவனங்கள் முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தித் தொழிற்பாடுகளுடன் இயங்குகின்றன. மாகாண அலுவலர்களின் நியமனங்கள், இடமாற்றங்கள், இடைநிறுத்தல்கள் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் என்பன மாகாணப் பொதுச்சேவை ஊடாக ஆளுநரினால் நிருவகிக்கப்படுகின்றது.

இம்மாகாணம் மூன்று நிருவாக மாவட்டங்களான அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களை கொண்டுள்ளதுடன் 45 பிரதேச செயலாளர் பிரிவுகளையும், 1,087 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்குகின்றது. மாவட்டச் செயலகங்கள் மத்திய அரசாங்கத்தினாலும் மாகாண சபையினாலும் பணிக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைத்துச் செயற்படுத்துகின்றன. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் அபிவிருத்தி மற்றும் நிருவாக நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது.

**கிழக்கு மாகாணசபையின் உருவாக்கம்**

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்த ஆயுதக் குழுக்களிலாலான அனுபவங்களைக் கொண்டு பயங்கரவாதத்திற்கான ஒரு ஆரம்ப அரசியல் தீர்வாக மாகாண சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் கூட அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டத்திற்கமைய அமைக்கப்பட்ட ஏனைய மாகாண சபைகள் மாகாணங்களில் நான்கு சுற்றுத் தேர்தல்களையும் தாண்டி தொடர்ந்து இயங்கி வருகின்ற அதேவேளையில், வடக்கு கிழக்கிற்கென தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை இரண்டு வருடங்களுக்கு மேல் செயற்படவில்லை என்பதுடன் 1991 இல் கலைக்கப்பட்டது.

இலங்கை சமாதானமான செயன்முறை அரசியலமைப்பு முன்னேற்றத்தின் ஊடாக அதன் சுதந்திரத்தினை வென்றெடுத்ததிலிருந்து நிலையானதும் நாகரிகமிக்கதுமான வாழ்க்கையின் தொடர் பதிவொன்றைப் பேணிவருகிறது. சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட நிருவாகக் கட்டமைப்புக்களுடன் கூடிய சட்டவாக்க முறைமை தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் மட்டங்களில் பின்பற்றப்படுகின்றன. இருந்த போதிலும் பயங்கரவாத செயற்பாடுகளுடன் இணைந்த முரண்பாடுமிக்கதொரு சூழ்நிலையில் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு கடந்த 17 வருடங்களாக தேர்தல் நடாத்த முடியாது போனதுடன் நாட்டின் வேறு பாகங்களைப் போலல்லாது மக்கள் அபிவிருத்தி மற்றும் சேவைகளைப் பெறுவதிலும் தடையேற்படுத்தியுள்ளது.

2006 ஒக்டோபர் 16 ஆம் திகதியன்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கமைய வடக்கு கிழக்கு மாகாண சபை வெவ்வேறாக சுயாதீனமாகச் செயற்படும் வகையில் பிரிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண சபையானது ஆளுநர், அலுவலர்களின் நியமனங்கள் மற்றும் அதன் அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் வேறான உட்கட்டமைப்பு ஒதுக்கப்பட்டு 2007 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து அதன் தொழிற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கை அரசியல் அமைப்பின் 13வது திருத்தமானது மாகாணசபைகள் மூலம் நிருவகிக்கப்பட வேண்டிய சட்டவாக்க, நிறைவேற்று மற்றும் நிதியியல் செயலாற்றல் குறித்துரைக்கப்பட்டதனூடாக அதிகாரம் பகிரப்பட்ட மாகாண ஆளுகை வரம்பினைத் தோற்றுவித்துள்ளது. மாகாணசபைகள் மற்றும் மத்திய அரசு என்பவற்றிற்கான பொறுப்புக்கள் மற்றும் விடய உள்ளடக்கங்கள் முறையே மாகாண மற்றும் ஒதுக்கப்பட்ட பட்டியல்களில் காட்டப்பட்டுள்ளன. ஒன்றோடொன்று தொடர்பான பொறுப்புகளுடன் விடயங்களிற்கென ஒத்தியங்கும் பட்டியலொன்றும் உள்ளது.

அதிகாரப் பகிர்வு விடயத்தில் மத்திய செயற்பாட்டு முறையிலிருந்து மாகாண செயற்படுத்தல் முறைமைக்கு தத்துவம் அதிகாரம் மற்றும் பொறுப்புக்களை இடமாற்றம் செய்யும் போது அதிக குழப்பங்கள் இருந்தன. மாகாணசபை முறைமை கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு மேலாக நிலைத்திருக்கின்ற போதும் பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு எட்டப்படவில்லை. இப்பிரச்சினைகள் மத்திய அரசாங்கமும் மாகாண சபையும் ஒருவரோடு ஒருவர் உடன்பட்டு இணைந்து தீர்க்கப்பட வேண்டியதொன்றாகும்.

கிட்டத்தட்ட இரண்டு தசாப்த காலமாக கிழக்கு மாகாண சபைக்காக தெரிவு செய்யப்பட்ட சபையொன்று இருந்திராமையும் நியதிச்சட்ட தத்துவங்களை பயன்படுத்த முடிந்திராமையும் மக்களின் அபிலாசைகளை நிவர்த்தி செய்வதற்காக 13வது திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தடையாக அமைந்தன. இதன் முக்கிய விளைவுகளில் ஒன்று மாகாணத்தினுள் ஒன்று திரட்டக்கூடிய

அரசிறை வருவாய்களை முழுமையாகத் தக்கவைப்பதாகும். மாகாணங்களுக்கென வழங்கப்பட்ட அபிவிருத்திச் செயற்பாட்டுப் பொறுப்புக்களை மாகாணசபைகள் தனித்து செயற்படுத்த முடியாதென்பது மிகத் தெளிவானதொன்றாகும். மாகாணசபை மற்றும் மத்திய அரசாங்கம் ஆகிய இரண்டும் ஒரு நிகழ்ச்சித்திட்ட செயற்பாடொன்றில் பங்காளர்களாகவும் இணைந்த வகையிலும் செயற்பட வேண்டும்.

கிழக்கு மாகாணமானது முரண்பாடு எழுச்சி கொண்ட சமூகமொன்றின் அனைத்து பண்புகளையும் கொண்டுள்ளதுடன் அதன் அபிவிருத்தி முயற்சிகளில் பல்வேறு சவால்களையும் எதிர் கொள்கின்றது. பயங்கரவாதத்துடன் கூடிய முரண்பாடு மற்றும் சுனாமி போன்றவற்றின் விளைவுகளினால் தோற்றுவிக்கப்பட்ட அழிவுகள் மற்றும் இடம்பெயர்வுகள் பாரிய முதலீட்டுக்கான தேவைகளை கொண்டுள்ளன. முரண்பாடுகளினால் பாதிக்கப்படாத பிரதேசங்களாக இருந்த போதும் மாகாணத்தில் சில பிரதேசங்கள் அபிவிருத்தியின்றி அல்லது மிகக் குறைந்தளவு அபிவிருத்தியுடன் விடுபட்டுள்ளது.

## மஹிந்த சிந்தனையில் கிழக்கின் உதயம்

தசாப்தங்களைக் கடந்து முரண்பாட்டினால் புறக்கணிக்கப்பட்டு, நலிவடைந்துள்ள கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான அரசாங்கத்தின் தொலைநோக்காக அதிமேதகு ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனையில் உருவாக்கப்பட்ட கிழக்கின் உதயம் வேலைத்திட்டமானது நவீன வீதிகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், நீர்வழங்கல் திட்டங்கள், குளங்கள் மற்றும் நீர்பாசனக் கால்வாய்கள், புனர்நிர்மாணங்கள், புதிய நகரங்களை உருவாக்குதல், புதிய தொழில்நுட்பம், திறன் மற்றும் அறிவு என்பவற்றைக் கொண்டுவருதல் போன்றவற்றுடன் கூடிய புதிய கிழக்கை உருவாக்குவதற்கான செயற்பாட்டினை துரிதப்படுத்தியுள்ளன.

கிழக்கின் உதயம் வேலைத்திட்டமானது தங்களது சுய ஆற்றல் வலிமையினால் மக்களை வலுப்படுத்துவதனூடாக சகல சமூகங்களும் சமமாகப் பயன்பெறும் வகையில் மாகாணம் முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கு முயற்சிக்கின்றது. அத்தகைய பௌதீக மானிட உட்கட்டமைப்பு வறுமை தணிப்புக்கு அவசியமானதுடன் மேல்மாகாணத்துடன் அண்மித்த அபிவிருத்திக்கு இட்டுச் செல்லும் ஒரு பரவலான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அவசியமாகின்றது.

## சமாதானம் மற்றும் ஐக்கியத்திற்கான முனைப்புக்கள்

கடந்த பல வருடங்களாக நிலவிய மோதல்களின் காரணமாக அழிவுக்குள்ளான வாழ்வமைப்புக்களையும் வாழ்வாதாரத்தையும் கொண்டிருக்கும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை, குறிப்பாக அண்மைக் காலத்தில் பாதிக்கப்பட்டவர்களை குடியமர்த்துவது அரசாங்கத்தின் முக்கிய அக்கறையாக இருந்ததுடன், கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் சமாதானத்திற்காகவும் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்குமான சிறந்ததொரு சூழ்நிலையொன்றை தோற்றுவிப்பதற்காக அரசாங்கமானது மிகக் குறுகிய காலப்பகுதியொன்றுள் சகல முயற்சிகளையும் எடுத்துள்ளது. இடம்பெயர்ந்த மக்களில் அதிகளவானோர் ஏற்கனவே மீளக் குடியமர்த்தப்பட்டிருப்பதுடன் அரசாங்கத்தினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் உதவியுடன் நலிவடைந்த மக்களுக்காகவும் மீளத் திரும்பியவர்களிற்கான வாழ்வாதார முன்னேற்றத்திற்கான வசதிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

## பாரிய அபிவிருத்தித்திட்டங்கள்

அரசாங்கம் இம்மாகாணத்தின் பாரிய உட்கட்டமைப்பு வசதிகளில் கவனம் செலுத்தியுள்ளது. அனல் மின்நிலையம், கைத்தொழில் பேட்டைகள், திருகோணமலைக்கான பாரிய நகர அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு வலயம், சுற்றுலா வலயம் மற்றும் நெடுஞ்சாலை வலையமைப்பின் மீள்நிர்மாணம் என்பன அரசாங்கத்தின் அத்தகைய வேலைத்திட்டங்களில் சிலவாகும்.

## மீண்டெழுதலும் புனர்நிர்மாணமும்

அரசாங்கத்தின் நடுத்தர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக மோதல் மற்றும் சுனாமியால் அழிவுற்ற பகுதிகள், அபிவிருத்தியிலிருந்து விடுபட்டதும் புறக்கணிக்கட்டப்பட்டதுமான பிரதேசங்கள் என்பவற்றின் உட்கட்டமைப்பு விருத்தி வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் மானியங்களின் உதவியுடன் கீழ்வரும் கருத்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

- வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றம் அபிவிருத்திச் செயற்திட்டம் - NECORD
- மோதலால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்பு செயற்திட்டம் - CAARP
- வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்திச் செயற்திட்டம் - NECCDEP
- பின்தங்கிய கிழக்கு உட்கட்டமைப்பு செயற்திட்டம்
- வறிய கிராமிய அபிவிருத்தி செயற்திட்டம் - PROP
- ஏழை மக்களின் பொருளாதார முன்னேற்ற மற்றும் சமுதாய வலுவூட்டல் செயற்திட்டம் - PEACE
- மீள் எழுச்சித் திட்டம்.
- வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம் - NEHRP

## விவசாயம்

கிழக்கு மாகாணத்தின் 70% ஆன மக்களின் பிரதான வருமான மூலம் விவசாயமாக இருப்பதனால் மாகாணத்தின் பொருளாதாரம் பிரதானமாக விவசாயத்திலேயே தங்கியுள்ளது. கிழக்கு மாகாணம் மரபு ரீதியாக இலங்கையின் தானியக் களஞ்சியம் என கருதப்பட்டதுடன் தேசிய நெல்லுற்பத்தியில் 24% இற்கு பங்களிப்புச் செய்கின்றது.

கிழக்கு மாகாணத்தின் நெல் பயிரிடப்படும் பரப்பு சுமார் 174,335 ஹெக்டேயராகும். பாதுகாப்பு சூழ்நிலையில் ஏற்பட்ட ஸ்திரமற்ற தன்மையினால் 2006 ஆம் ஆண்டில் 53% நிலப்பரப்பு மாத்திரமே பயிர்ச்செய்கை பண்ணப்பட்டது. இதற்கு மேலதிகமாக 17,975 ஹெக்டேயர் நிலப்பரப்பு 2007 ஆம் ஆண்டில் பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டுவரப்பட்டது. விவசாய அபிவிருத்தி உபாயத்தின் குறிக்கோளாவது மொத்த பயிர்ச்செய்கை பண்ணக்கூடிய நிலங்களில் 80% இனை உற்பத்தி நிலங்களாக மாற்றுவதாகும். ஹெக்டேயர் ஒன்றிற்கான உற்பத்தியினை 4 மெ.தொ. இருந்து 5 மெ.தொ. ஆக அதிகரிப்பது, விதை நெல் உற்பத்தியை மேம்படுத்தல் மற்றும் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்குப் பொருத்தமான பண்ணை நுட்பங்களை அறமுகப்படுத்தல் போன்றன மாகாணத்தில் நெல் உற்பத்தியினை அதிகரிப்பதற்கான ஏனைய பிரதான இலக்குகளாகும்.

விலங்குணவிற்கான பிரதான உள்ளீடாக சோளம் கருதப்படுவதனால் அதற்கு ஏற்பட்டுள்ள தேவையின் காரணமாக சோள உற்பத்திக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இனச்சேர்க்கையின் மூலம் பெறப்பட்ட தரமான விதைகள் வழங்கல் மற்றும் சந்தைப்படுத்தல் உடன்பாடுகள் உள்ளிட்ட ஏனைய உதவிகளுடன் பரந்தளவிலான சோளச் செய்கை ஊக்குவிக்கப்பட்டு வருகின்றதுடன் அது வெற்றிகரமான ஒரு முயற்சியெனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 2006/2007 பெரும்போகத்தில் சோளச் செய்கைக்குட்பட்ட 8,100 ஹெக்டேயர் பிரதேசம் 2007/2008 பெரும்போகத்தில் 11,354 ஹெக்டேயராக அதிகரித்ததுடன் தேசிய ரீதியான சோளத் தேவையின் 25% இனை கிழக்கிலிருந்து பூர்த்தி செய்வதே இதன் இலக்காகும்.

மாகாண மரக்கறித் தேவையில் 50% உள்ளூரிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றதென மதிப்பிடப்பட்டுள்ளது. மாகாணத்தில் மரக்கறி உற்பத்தியினை அதிகரிப்பதற்காக வர்த்தக மரக்கறிப் பயிர்ச்செய்கை மற்றும் வலை கூடாரங்களின் கீழ் வருடமுழுவதுமான பயிர்ச்செய்கை என்பன ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. "பயிர் வளர்ப்போம் நாட்டை உயர்த்துவோம்" என்ற சுலோகத்தின் கீழ் அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட உணவு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் கடந்த வருடம் சுமார் 10,810 வீட்டுத்தோட்டங்கள் உருவாக்கப்பட்டன. சுமார் 10,000 மரக்கறி விதைப் பக்கற்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. காளான் பயிர்ச்செய்கை மற்றும் தேனீ வளர்ப்புக் கிராமங்கள் என்பனவும் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

### கால்நடை அபிவிருத்தி

நாட்டின் பிரதான பாலுற்பத்தி செய்யும் மாகாணங்களில் கிழக்கு மாகாணமும் ஒன்றாவதுடன் நாடளாவிய பசுக்களின் எண்ணிக்கையில் 15% இனை தன்னகத்தே கொண்டுள்ளது. தேசிய மொத்த பாலுற்பத்தியில் 11% கிழக்கு மாகாணத்திலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றது என மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மாகாணத்தில் பொருத்தமான பண்ணை நிலங்கள், நீர் நிலைகள் என்பன பயன்படுத்தப்படாத வளங்களாக இருப்பதுடன் ஆற்றல் உள்ள மற்றும் ஊழிய மனித வளமும் நிறைந்து காணப்படுகின்றன.

அண்மைக்கால முரண்பாடுகளைத் தொடர்ந்து பால் சேகரிப்பு வலையமைப்பில் பாரிய தடங்கல்கள், சீர்குலைவுகள் ஏற்பட்டுள்ளதுடன் விலங்குகளும் காணாமல் போயிருந்தன. இது மாகாணத்தின் கால்நடை உற்பத்தியில் படிப்படியான வீழ்ச்சியினைத் தோற்றுவித்திருந்தது. மறுபுறத்தில் மிருக வைத்திய நிலையங்கள், மிருக வைத்தியர் மற்றும் கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை என்பன இம்மாகாணத்தின் கால்நடை உற்பத்தித் துறையின் வளர்ச்சியை மட்டுப்படுத்தும் காரணிகளாக அடையாளங் காணப்பட்டுள்ளன.

தற்போது கிழக்கு மாகாணத்தில் 42 மிருக வைத்திய நிலையங்கள் தொழிற்படுகின்றன. 22 கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மாகாணப் பொதுச் சேவைக்குள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் குறுகிய காலத்தில் அரசாங்க மிருக வைத்தியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைளும் எடுக்கப்பட்டுள்ளது. ஒரு நாள் வயதுடைய கோழிக்குஞ்சுகள் உற்பத்தியினை மாதமொன்றுக்கு 4,000 இருந்து 12,000 ஆக அதிகரிக்கும் வகையில் உப்புவெளியில் அமைந்துள்ள பிராந்திய கால்நடைப் பண்ணை வலுவூட்டப்பட்டுள்ளது. சுமார் 55,000

கைவிடப்பட்ட விலங்குகள் பாதுகாப்புப் படையினரதும் கால்நடை அபிவிருத்தி அமைச்சினதும் உதவியுடன் மீளக்கொண்டுவரப்பட்டுள்ளன.

அடுத்துவரும் ஐந்து வருட காலத்தில் பால் உற்பத்தியினை இரட்டிப்பாக்குவதே மாகாணத்தின் இலக்காகும். 9 பால் பதனிடல் நிலையங்கள், 14 பால் குளிரூட்டல் நிலையங்கள் மற்றும் 3 விலங்குணவு உற்பத்தி நிலையங்கள் என்பவற்றைத் தாபிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. உள்ளூர் விலங்குகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக உயர் இன பசுக்கள் மற்றும் ஆடுகளை இறக்குமதி செய்வதற்கும் செயற்கை இன விருத்தியை மேம்படுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் கிழக்கு மாகாணத்தில் கால்நடை உற்பத்தியை மேம்படுத்துவதற்காக புதிய பால் கிராமங்கள், ஆடு வளர்ப்பு கிராமங்கள், பால் விற்பனை நிலையங்கள், பசு இனவிருத்தி பண்ணை, ஒருங்கிணைந்த நவீன பண்ணைகள், நடமாடும் மிருக வைத்திய நிலையங்கள் என்பனவற்றை தாபிப்பதற்கு திட்டமிடப்படுகின்றன.

**நீர்ப்பாசனம்**

41 நடுத்தரக் குளங்களின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு, குளக்கட்டு வேலைகள் மற்றும் கால்வாய் அமைப்பு முன்னேற்ற வேலைகள் அவ்வாறே தெரிவு செய்யப்பட்ட சிறிய குளங்களின் புனரமைப்பு பணிகளை மாகாண நிறுவனங்கள் கையாளுகின்றன.

புனரமைப்புச் செயற்திட்ட உதவிகளுடன் குளங்கள், நீர்ப்பாசன திட்டங்களை புதுப்பித்தல் மற்றும் கால்வாய்களை துப்பரவு செய்தல் போன்றவற்றினூடாக நீர்ப்பாசன இயலளவு விருத்தி செய்யப்பட்டுள்ளது. 2008 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள 115 சிறிய குளங்கள் புனரமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**கல்வி**

கிழக்கு மாகாணத்தில் 13 கல்வி வலயங்கள், 44 பிரதேச கல்வி அலுவலகங்கள் மற்றும் 1,015 பாடசாலைகள் என்பவற்றுடன் சிறப்பாக தாபிக்கப்பட்ட மாகாண கல்வி வலையமைப்பொன்று இயங்கி சமூகத்திற்கு சிறந்த கல்விச் சேவையை வழங்குகின்றன. இப் பாடசாலைகளில் 984 மாகாண பாடசாலைகளும் 31 தேசிய பாடசாலைகளும் அடங்குகின்றன.

கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகள் 441 தமிழ் பாடசாலைகள், 298 முஸ்லீம் பாடசாலைகள் மற்றும் 242 சிங்கள பாடசாலைகள் என இன ரீதியாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், கற்பித்தல் மொழி என்ற வகையில் 716 தமிழ் மொழிப் பாடசாலைகளும் 242 சிங்கள மொழிப் பாடசாலைகளும் மிகுதி 22 பாடசாலைகள் ஆங்கில மொழியுடன் கலந்த பாடசாலைகள் ஆகும். தற்போது இம் மாகாணத்தில் 17,458 அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், 2,272 கல்வி சாரா ஊழியர்களின் சேவைகளின் கீழ் 377,473 மாணவர்கள் தங்கள் கல்வியினைத் தொடர்கின்றனர்.

2006-2007 காலப்பகுதியில் 2,241 ஆசிரியர்களாக ஆட்சேர்க்கப்பட்டுள்ளதுடன், 07 பாடசாலைகள் புதிதாக திறக்கப்பட்டு 40 பாடசாலைகள் அடுத்த உயர் மட்டத்திற்கு தரமுயர்த்தப்பட்டுமுள்ளன.

2007 ஆம் ஆண்டில் 23,273 மாணவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றினர். இவர்களில் 2,491 மாணவர்கள் புலமைப்பரிசில் திட்டத்திற்கு தகுதி பெற்றனர். 2007 ஆம் ஆண்டு க.பொ.த(உ/த) பரீட்சைக்கு தோற்றிய 9213 மாணவர்களுள் 60% மானோர் பல்கலைக்கழக நுழைவுக்கு தகுதி பெற்றனர். இத்தகைய முன்னேற்றங்கள் க.பொ.த(சா/த) பரீட்சையிலும் காண்பிக்கப்பட்டுள்ளது. காரைதீவு மற்றும் திருகோணமலைப் பிரதேசங்களில் இருந்து இரு மாணவிகள் தமிழ் மொழிமூலப் பிரிவில் தேசிய மட்டத்தில் முறையே முதலாவது மற்றும் ஐந்தாவது இடத்தினைப் பெற்றிருந்தனர்.

### சுகாதாரம்

மக்களுக்கான நோயாளர் கவனிப்பு சேவை மாகாண மற்றும் மத்திய அரசாங்கம் ஆகிய இரண்டினது சுகாதார நிறுவனங்களினாலும் வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக நோய்த் தடுப்புச் சேவையானது மாகாண சுகாதார அமைச்சின் பொறுப்பாகவுள்ளது. இந்த அமைச்சு தேசிய சுகாதார கொள்கைக்கமைவாக ஐந்து வருட மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அடையாளங்காணப்பட்ட சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துகின்றது.

மாகாண சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சானது அதன் கீழ் தாபிக்கப்பட்ட சுகாதார சேவைகள் மற்றும் சுதேச மருத்துவ திணைக்களங்கள், 04 பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர்கள் மற்றும் 120 நோயாளர் கவனிப்பு நிலையங்கள் என்பவற்றின் நிர்வாக உதவியுடன் மாகாணத்தின் அனைத்து மக்களுக்கும் சுகாதார சேவையினை வழங்கி வருகின்றது. கிழக்கு மாகாணத்தில் சுகாதார சேவைகள் தேசிய மற்றும் மாகாண கெபள்கைகளுடன் இணைந்த வழியில் நடைபெறுவதுடன் மட்டுப்படுத்தப்பட்ட நிதி மற்றும் மனித வளங்களுடன் ஒரு திருப்திகரமான தரத்தினை பேணக்கூடியதாக உள்ளது.

### வீதிகள்

கிழக்கு மாகாணத்தின் வீதி வலையமைப்பானது “A” (நெடுஞ்சாலை), “B” (நகரங்களை இணைக்கும் பிரதான வீதிகள்), “C” (சிறிய வீதிகள்), “D” (கிரவல் வீதிகள்), “E” (கிராமிய வீதிகள்) போன்ற வகுப்பு வீதிகளினால் ஒன்றினைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள வீதி வலையமைப்பில் மாகாண வீதி திணைக்களத்தின் கீழ் வருகின்ற 1,066 கி.மீ. C வகுப்பு வீதிகளும் 370 கி.மீ. D வகுப்பு வீதிகளும் உள்ளன. இவ் வீதிகளில் சில உரிய தரத்திற்கு மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் வீதி அபிவிருத்தித் திணைக்களம் மாகாணத்திலுள்ள முக்கிய வீதிகளையும் பாலங்களையும் பராமரித்து வருவதுடன் வெளிநாட்டு உதவியுடன் பாரிய வீதி வலையமைப்பு புனரமைப்பினை மேற்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது.

### கைத்தொழில்

மாகாணத்திற்கென வழங்கப்பட்ட அதிகாரங்களுடன் பிராந்திய கைத்தொழில்களையும் தொழில் முயற்சிகளையும் முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாகாண கைத்தொழில் திணைக்களம் கிழக்குமாகாண

சமூகத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சிறு கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகளுக்கு சிறு கடனளிப்பு, சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், தொழில்நுட்ப வசதி, சட்ட ஆலோசனை என்ற வடிவில் சேவைகளையும் வசதிகளையும் வழங்கி வருகின்றது.

இது கைத்தொழில் துறை மற்றும் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக மூன்று மாவட்டங்களிலுமுள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட 962 இளைஞர்கள், யுவதிகள் 2007 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளில் பயிற்றப்பட்டுள்ளனர். இதற்கு மேலாக மாகாண திணைக்களம் தேசிய அருங்கலைகள் சபையுடன் சுயதொழில் பயிற்சிகளை நடத்துகின்றது. தெரிவு செய்யப்பட்ட துறைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினர்களிற்கு உயர் பயிற்சிகளை வழங்குவதற்கு ஏற்கனவே உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### கூட்டுறவு அபிவிருத்தி

மக்களினது தொழில் முயற்சி என்ற வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் கிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி செயன்முறைகளில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை நல்லாட்சி என்ற வகையில் வழங்குகின்றது. அத்துடன், 04 உதவி ஆணையாளர் அலுவலகங்களின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டல்களின் கீழ் 44 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட 996 கூட்டுறவுச் சங்கங்களினூடாக சமுதாயத்திற்கான அவசிய சேவைகளை வழங்கி வருகின்றது.

தேசிய கொள்கைக்கமைவாக மாகாணத்திலுள்ள 4 கூட்டுறவு உதவி ஆணையாளர் பிரிவுகளில் 28 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் கோப் சிட்டிகள் (co-op cities) நிலையங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

### உள்ளூராட்சி

கிழக்கு மாகாணத்தில் 43 உள்ளூராட்சி சபைகள் உள்ளூராட்சி சேவைகைளை நிர்வகித்து வழங்குகின்றன. உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர்களின் மேற்பார்வையின் கீழ் 02 மாநகர சபைகள், 04 நகர சபைகள் மற்றும் 37 பிரதேச சபைகள் உள்ளன.

உள்ளூர் அதிகார சபைகள் தங்களின் ஆளுகைப் பிரதேசத்தின் அபிவிருத்தி முகவர்களாக செயற்படுவதுடன் மத்திய மற்றும் மாகாண நிறுவனங்களுடன் இணைந்து உள்ளூர் மட்டத்திலான அபிவிருத்திச் செயற்பாடுகளில் பாரிய பங்கினை வகிக்கின்றன. கிராமிய வீதிகள், சந்தைகள், கிராமிய மின் வழங்கல், கிராமிய நீர் வழங்கல், மகப்பேற்று நிலையங்கள், பாலர் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் போன்ற சமூக உட்கட்டமைப்பு மேம்படுத்தல்கள் தொடர்பான மிக அதிகமான வேலைகள் மக்களின் தேவைகளின் முன்னுரிமை அடிப்படையில் மாகாணத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ளூராட்சி சபைகளுடாக செயற்படுத்தப்படுகின்றன.

### முடிவுரை

கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் வெற்றிகரமான முடிவானது இம் மாகாணத்தில் சிவில் நிருவாகத்தினைத் தாபித்தல் மற்றும் சனநாயக செயன்முறையை மீளமைத்தல் போன்றவற்றினை நோக்கிய மிக முக்கிய படிமுறையாகும். இது தேசிய பிரச்சினைக்கும் தேசிய நல்லிணக்கத்தைத் தோற்றுவிப்பதற்குமான இறுதித் தீர்வொன்றினை நோக்கிய

படிமுறையொன்றாகவும் அமைகின்றது. இதன் விளைவு வடமாகாணத்தில் சனநாயக இறுதி மீளமைப்பு மீதான தாக்கத்தினையும் பிரதிபலிக்கின்றது.

மாகாண நிருவாகமொன்றினை தாபிப்பது முறையான அதிகாரப் பரவலாக்கலை நோக்கியதொரு ஆரம்ப செயன்முறை மாத்திரமேயாகும். 13வது அரசியல் யாப்பு திருத்தத்தினை ஒரு ஒழுங்கு முறையில் முழுமையாக அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை அதிமேதகு சனாதிபதியவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். மாகாண சபையானது அதன் நிருவாகத்திற்காக மாத்திரமன்றி மாகாணத்திலுள்ள அபிவிருத்திப் பணிகளுக்காகவும் உள்ளூராட்சி நிறுவனங்களின் பணிகளை வலுப்படுத்துவதற்காகவும் போதிய நிதியளிக்கப்படல் வேண்டும். மாகாண சபையானது அதிகாரப் பரவலாக்கலின் ஒரு அலகு என்ற வகையில் மாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தியின் இயக்க சாதனமாகக் காணப்படல் வேண்டும்.

மக்களுக்கு சேவையாற்றவும் சனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்வதற்கான தைரியமும் பண்பும் கொண்டவரும் ஒரு காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினராக இருந்தவருமான ஒருவரை நாம் முதலமைச்சராகக் கொண்டுள்ளோம். அவருடன் பல்வேறு அரசியல் கட்சிகள் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபையைப் பெற்றிருப்பது கிழக்கு மாகாண மக்களின் அதிர்ஷ்டமாகும்.

கடந்த 17 வருடங்களாக மாகாண சபை மற்றும் அமைச்சர்கள் சபை என்பவற்றின் இல்லாமை காரணமாக மாகாண அமைச்சுக்கள் ஆளுநரின் வழிகாட்டுதலின் கீழ் பிரதம செயலாளர் மற்றும் அமைச்சு செயலாளர்களினால் கொண்டு நடாத்தப்பட்டது. ஈடுபாடும் ஆளுமையும் நிறைந்த முதலமைச்சர் மற்றும் ஏனைய நான்கு அமைச்சர்களைக் கொண்டு அமைச்சர்கள் சபை ஒன்று அமைக்கப்படுவதனூடாக முக்கிய நிலை இப்போது மாற்றப்படுகிறது. மக்களினது தேவைகள் பற்றியும் அபிவிருத்தித் துறைகள் பற்றியும் இவர்கள் நன்கு அறிந்திருப்பதனால் கிழக்கு மாகாணசபை கடந்த சில வருடங்களில் செய்ய முடிந்திராத பலவற்றை வழங்க முடியுமென நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

கௌரவ அவையினர் எல்லோரும் தமது மனதில் ஒரே எண்ணத்தையே கொண்டுள்ளார்கள் என நான் நம்புகின்றேன். கிழக்கில் கணிசமான காலமாக இல்லாதிருந்த ஜனநாயக நடைமுறையில் பங்கேற்று கடந்த காலங்களில் சொல்லவொண்ணா துயரங்களால் அவதியுற்றிருந்த மக்களுக்கு தேவையான சேவைகளையும் அபிவிருத்திகளையும் வழங்க வேண்டும் என்பதே அதுவாகும்.

இங்குள்ள முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அனைவருக்கும் நாங்கள் கால் பதித்துள்ள இந்த சவால்களில் வெற்றி கொள்ள என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.